**வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி -2020/2021**

-----------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் ("கம்பனி") 2021 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாரான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தனைத் தவிர்த்து, வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் 2021 மார்ச் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிரயாயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிரயாயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கத்தை செலுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்த்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளின் ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலமும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தெளிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீடு தொடர்பான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தவதன் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. போதியளவு நிச்சியமற்ற நிலைமைகள் உள்ளதாக நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது

அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதுக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்களை முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கப்பூர்வமாக செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய போதுமான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கப்பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தவா என்பதும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் ஆண்டின் இறுதி இருப்பு பௌதீகமாக உறுதி செய்யப்பட்டு கிரயம் மற்றும் தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியில் கணக்கிடப்படல் வேண்டும். அதன் பிரகாரம் வெளி கணக்காளர்களின் பங்கேற்பில் 2021 ஒக்தோபர் மாதத்தில் பௌதீக இருப்பு மெய்மையாய்வொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் இருப்பு ஆய்வு மேற்கொள்ளக்கூடிய பிரகாரம் இருப்புக்களை வைத்திருக்காமையின் காரணத்தினால் இருப்பு பௌதீக ரீதியில் மெய்மையாய்வு மேற்கொள்ள முடியாது போனது. எவ்வாறெனினும் இருப்பு அறிக்கைகளின் பிரகாரம் இறுதி இருப்பு ரூபா 446,784,423 இற்கு மதிப்பிடப்பட்டு | சிறு மற்றும் பெரும் போகங்களின் போது துறைமுகத்திலிருந்து பெறப்படுகின்ற இருப்பு விரைவாக விடுவிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு விரைவில் விடுவித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத விடத்து எங்கள் நிறுவனத்திற்கு விரைவு விடுவிப்பு வருமானமாக டொலர்களாக பெப்படுகின்ற தொகை இழக்கப்படுகின்றது. அக் காரணத்தினால் கப்பலகிலிருந்து பெறப்படுகின்ற உர இருப்பு மிகவும் விரைவாக எங்களுக்கு சொந்தமான களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தல் வேண்டும். | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் இறுதி இருப்பு பௌதீக ரீதியாக உறுதி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறுதி கணக்குகளில் காண்பிக்கபபட்டுள்ளதுடன் அதன் துல்லியம் தொடர்பில் கணக்காய்வின் போது திருப்தியடைய முடியவில்லை. | | |
| (ஆ) | கம்பனியினால் ரூபா 6,000,000 ஆன 122.73 மெட்ரிக் டொன்னிலான உர இருப்பு பற்றாக்குறையொன்று இனங்காணப்பட்டுள்ளதென 2.8.6 (ர) ஆம் இலக்க கணக்கீட்டு குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அவ் உர வகை எது, அதன் பெறுமதி கணிக்கப்பட்ட அடிப்படை என்ன போன்றன தெளிவுப்படுத்தப்பட்டிராததுடன் இருப்பு பற்றாக்குறை கிரயத்திற்கு சீராக்கப்பட்டிராமையினால் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 6,000,000 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வரும் கணக்கு ஆண்டில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பரிசோதனை ஒன்று நடத்தப்பட்டு நட்டம் அறவிடப்படுவதற்-கும் உர இருப்பு பற்றாக்குறை கிரயத்திற்கு சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | ஒவ்வொரு நாட்களுக்குரியதாக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படுகின்ற அந்நிய செலாவணி மாற்று வீதத்திற்கு பதிலாக வேறுப்பட்ட வீதத்தின் அடிப்படையில் அந்நிய செலாவணி மாற்று இலாப நட்டம் கணிகப்பட்டமையினால் கணக்கிடப்பட்டுள்ள அந்நிய செலாவணி மாற்று நட்டம் ரூபா 2,845,381 இனால் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது. | வரும் கணக்கு ஆண்டில் சீர் செய்யப்படும். | இலங்கை மத்திய வங்கியினால் நாள்தோறும் வெளியிடப்படுகின்ற அந்நிய செலவாணியின் அடிப்படயில் அந்நிய செலவாணி இலாபம் நட்டம் கணிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மாத்தளை மாவட்டத்தினுள் லக்பொஹொர களஞ்சியம் அமைந்துள்ள வாரியபொல வத்த என்ற பெயரிலான 29.93 பர்சஸ் இனாலான காணி, காணி மறுசீரமைப்பு ஆனைக்குழுவினால் 2020 செப்தெம்பர் 10 ஆந் திகதி கம்பனிக்கு ஒப்பாவணம் ஊடாக சட்டரீதியாக கையளிக்கப்பட்ட போதிலும் அக் காணி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படாமையின் காரணத்தினால் நிதிக் கூற்றுக்களில் நடைமுறை அ்லாச் சொத்துக்கள் மிகையாக மதிப்பிடப்பட்டிருந்தது. | இறுதி கணக்கு சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் இந்த காணிக்கு மதிப்பீட்டு பெறுமதியொன்று சீராக்கப்பட்டிராததுடன் வரும் ஆண்டில் மதிப்பீட்டாளர் ஒருவர் ஊடாக மதிப்பிடப்பட்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |
| (உ) | கம்பனிக்கு சொந்தான ஆய்வுக் கூடத்தின் ஊடாக கணக்கு ஆண்டினுள் வெளி நிறுவனங்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள 103 ஆய்வுக்கூட பரிசோதனைகளுக்குரிய வருமானம் ரூபா 1,200,140 ஆக காணப்பட்ட போதிலும், நிதி கூற்றில் ஆண்டினுள் காசாக பெறப்பட்ட ரூபா 693,406 ஆன பெறுமதி மட்டும் ஆய்வுக்கூட வருமானமாக | வரும் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனியினால் ஈட்டப்பட்ட வருமானம் உரிய வகையில் இனங்கண்டு கணக்கிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட்டமையின் காரணத்தினால் ஆண்டின் இலாபம் ரூபா 506,734 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் நடைமுறை சொத்துக்கள் அப் பெறுமானத்தினால் குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | களஞ்சியங்களுக்காக உரிய வண்ணம் களஞ்சிய ஊழியர்கள் பெற்றுக் கொடுக்க முடியாமையின் காரணத்தினால் தனியார் நிறுவனமொன்றிலிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 172,500 ஆன ஏல உத்தரவாதங்கள் கம்பனியின் வருமானமாக கணக்கிடப்படாது இன்னுமாக நடைமுறை பொறுப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | தனியார் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ஏல உத்திரவாதத்தின் பணமான ரூபா 162,500 ஆன தொகை இந்த கணக்கு ஆண்டில் வருமானத்தில் சீராக்கப்பட்டு சீர் செய்யப்படும். | உறுதியாக அறவிடப்பட்ட ஏல உத்தரவாதம் கம்பனியின் வருமானமாக கணக்கிடப்படல் வேண்டும். |
| (எ) | கம்பனிக்கு சேவை வழங்கும் மூன்று ஒப்பந்தக்காரர்களுக்குரிய 2021 மார்ச் 31 ஆந் திகதியாகையில் 06 மாதங்களை மிகைத்திருந்த போதிலும் கோரப்படாத மொத்த பெறுமதி ரூபா 239,141 ஆன நிறுத்தி வைக்கப்பட்ட தொகை வருமானத்திற்கு சீராக்கப்பட்டோ அல்லது குறித்த தரப்பினரிடமிருந்து விசாரிக்கப்படாது செலுத்த வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கம்பனிக்கு சேவை வழங்கிய மூன்று ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்குள்ள ரூபா 239,141 ஆன நிறுத்தி வைக்கப்பட்ட தொகை தொடர்பாக வரும் கணக்கு ஆண்டில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலங் கடந்த வைப்புக்களுக்கான உரித்து காணப்படாத போது வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | கணக்கு ஆண்டினுள் நுகர்வுப் பொருட்கள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள காகிதப் பொருட்கள், பிளம்பிங் உதிரிப்பாகங்கள், கட்டிடப் பொருட்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் போன்றவற்றின் ரூபா 415,514 ஆன பற்றாக்குறை தொடர்பாக புலனாய்வொன்று மேற்கொள்ள்பட்டு பொறுப்பு கூற வேண்டியவர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு பதிலாக பற்றாக்குறையின் பெறுமதி ஏனைய பெற வேண்டிய பெறுமதியொன்றாக நிதிக் கூற்றினுள் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கு ஆண்டினுள் நுகர்வுப் பொருட்கள் களஞ்சியத்தின் பற்றாக்குறை தொடர்பாக விடயங்கள் பரிசோதிக்கப்பட்டதுடன் அதில் ரூபா 2,010,196 ஆன பெறுமதி களஞ்சியத்தினுள் வழங்கப்படாத நிலையான சொத்துக்களாகவும் ரூபா 15,470 ஆன பெறுமதியையுடைய நுகர்வுப் பொருட்கள் சில பௌதீக இருப்பிற்கு உள்ளடக்கப்பட வேண்டியிருந்தது. அதன் பிராரம் நுகர்வுப் பொருட்கள் களஞ்சியத்தின் உள்ளவாரான பற்றாக்குறை ரூபா 415,514 மட்டுமாகும். | பற்றாக்குறை தொடர்பாக புலனாய்வொன்று மேறகொள்ளப்பட்டு பொறுப்பு கூற வேண்டியவர்களிட-மிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பெற வேண்டிய மீதிகளில் பெலவத்த சீனி கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூா 807,650 ஆன கடன் மீதியொன்று உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் பெலவத்த சீனி கம்பனியின் கணக்கில் அவ்வாறான செலுத்தப்பட வேண்டிய மீதியொன்று காண்பிக்கப்படாததுடன் லக் பொஹொர கம்பனிக்கு செலுத்தப் டவேண்டிய அனைத்து கொடுப்பனவுகளும் செலுத்து முடிவடைந்துள்ளமை பெலவத்த சீனி கம்பனியினால் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்படி கடன் மீதி தொடர்பாக முறையான புலனாய்வொன்று மேற்கொண்டு அவர்களிடமிருந்து அத் தொகை அறவிடப்படுவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெலவத்த சீனி கம்பனியிலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 807,650 ஆன கடன் மீதி பெற வேண்டிய தொகையாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வரும் கணக்கு ஆண்டினுள் இது தொடர்பாக முறையான புலனாய்வொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய மீதிகள் அறவிடப்பட முடியாதவையெனில் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்படல் வேண்டும். |

### 1.6 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 4 ஆண்டுகள் தொடக்கம் 11 ஆண்டுகள் வரையான காலத்தினுள் உரிமை கோரப்படாத ரூபா 274,000 ஆன மீண்டும் செலுத்தப்படுகின்ற ஏல உத்தரவாதங்கள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நீண்ட காலமாக நடைமுறை பொறுப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | 4 ஆண்டுகள் தொடக்கம் 11 ஆண்டுகள் காலத்தினுள் நிறுவனத்திற்கு வைக்கப்பட்டுள்ள மீண்ம் செலுத்தப்படுகின்ற ஏல உத்தரவாதங்களின் பெறுமதியான ரூபா 274,000 ஆன தொகை இந்த ஆண்டின் வருமானத்திற்கு சீராக்கப்பட்டு சீர் செய்யப்படும். | உரிமை கோரப்படாதவை என உறுதி செய்யப்பட்டதன் பின்னர் ஏல உத்தரவாதங்கள் வருமானத்திற்கு சேர்க்கப்படல் வேண்டும். |

### 1.7 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 யூன் 08 திகதிய அமப/21/0964/323/030 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்திக் கொடுத்த கரிம உர கொள்கை மற்றும் 2021 யூலை 31 திகதிய 2238/45 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம் மீண்டும் இரசாயன உரம் கொண்டுவரப்படுவதற்காக அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் லக்பொஹொர கம்பனிக்கு அவ் அங்கீகாரம் பெறப்படாமையினால் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் கம்பனியினால் மேற்கொண்ட வியாபார நடவடிக்கை இழந்திருந்தது. | 2021 ஆம் ஆண்டு தொடக்கம் கம்பனியின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட இரசாயன உர இறக்குமதிக்காக அங்கீகாரம் பெறப்படாததெனிலும், நாட்டினுள் கரிம உரம் கொள்கை செயற்படுத்துவதற்காக பாரிய பங்களிப்பொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டது. எனினும் தற்போது மீண்டு இரசாயன உரம் இறக்குமதி செய்தல் | கம்பனியின் தொடர்ச்சியான நிலைத்திருத்- தன்மைக்காக பொறுத்தமான தீர்மானம் எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| கம்பனியின் தொடர்ச்சியான நிலைத்திருத்தன்மை உறுதி செய்யக்கூடிய புதிய வியாபார சந்தர்ப்பங்களுக்கு முன்வராமையினால் கம்பனியின் தொடர்ச்சியான நிலைத்திருத்தன்மை சவாலாக இருப்பது அவதானிக்கப்பட்டது. | ஆரம்பிக்கப்பட்டுள்ளமை-யினால் கம்பனியின் தொடர்ச்சியான நிலைத்திருத்தன்மை தொடர்பில் சவாலொன்று இல்லையென குறிப்பீடுகின்றேன். |

## 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2015 மே 25 திகதிய ீநுனு 1.∴2015 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2016 ஒக்தோபர் 25 திகதிய ீநுனு 1.∴2015(ை) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் 3 ஆம் பிரிவு | வாகனம் மற்றும் எரிபொருள் கொடுப்பனவு பெற்றுக் கொடுக்கக்கூடிய உத்தியோகத்தர்-கள் பிரிவிற்கு உட்படாத ஆஆ 1-2 சேவை பிரிவிற்கு சொந்தமான பத்து உத்தியோகத்தர்-களுக்கு மாதாந்தம் ரூபா 10,000 வீதம் கொடுப்பனவு மற்றும் அப் பிரிவின் பிரதேச விற்பனையாளர்க-ளாக பணியாற்றும் 08 உத்தியோகத்தர்-களுக்கு மாதாந்தம் ரூபா 40,000 ஆன கொடுப்பனவு மற்றும் அதிகபட்சமாக 125 லீட்டர் ஆன எரிப்பொருள் கொடுப்பனவு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை மிகைத்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | மத்திய மட்டத்தின் முகாமையாளர்களுக்காக (ஆஆ 1-2) குழு போக்குவரத்து வழங்குவதற்கு பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல 1/2015 இன் 04 ஆம் பிரிவில் ஏற்பாடுகள் காணப்படுகின்றது. எனினும் கம்பனியின் மத்திய மட்டத்தின் 09 முகாமையாளர்களுக்காக குழு போக்குவரத்து வழங்கப்பட வேண்டிய போதிலும் அவ் உத்தியோகத்தர்கள் ஒரே வீதியில் காணப்படாமையினால் ஏற்படும் பிரயோக சிக்கல்களை போன்று அதற்காக குறைந்தபட்சம் 03 வாகனங்கள் பயன்படுத்த வேண்டி ஏற்படுகின்றது. அதன் பிரகாரம் நிறுவனத்திற்கு ஏற்க நேருகின்ற கிரயம் கருத்திற் கொள்ளப்பட்டு ஒரு உத்தியோகத்தருக்கு மாதாந்தம் போக்குவரத்து கொடுப்பனவாக ரூபா 10,000 ஆன தொகை பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ளது. கடமைகள் வினைத்திறனாக, விளைத்திறனாக மற்றும் திருப்திகரமாக நிறைவேற்றுவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் பிரதேச விற்பனை முகாமையாளர்களுக்கு மாதாந்தம் ரூபா 40,000 ஆன கொடுப்பனவொன்று மற்றும் உயர்ந்தபட்சம் 125 லீட்டர் எரிபொருள் கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.9 ஐரீ (ஐவு) பொதுவான கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பசளை பெறுதல், வழங்குதல், மாற்றுதல் உள்ளடங்கலாக பசளை தொடர்பான முழுமையான செயன்முறை கணினி மயப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கணினி அமைப்பிற்கு முன் திகதியொன்றில் நாளதுவரையாக்கப்பட்ட வண்ணம் தரவுகள் உள்ளடக்கப்படும் திறன் காணப்படுகின்றமை, தேவையான பொது கட்டுப்பாடுகள் மற்றும் அமைப்புக் கட்டுப்பாடு செயற்படுத்தப்படாமையின் காணரத்தினால் கணினி அமைப்பு தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது. | எங்கள் கம்பனியின் 42 பிரதேச களஞ்சியங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றதுடன் அக் களஞ்சியங்களில் 29 ஆனவை பிரதான அலுவலகங்களுடன் தொடர்புப்படுத்தி தரவுகள் நாளதுவரையாயக்கப்பட்டு அமைப்பிற்கு உள்ளடக்கப்படுகின்றதுடன் எஞ்சிய பிரதேச களஞ்சியங்களுக்காக தபாற் வழியில் அல்லது குரியர் வழியில் பெற்றுக் கொள்ளப்படும் பொருட்கள் கையேற்கும் ரசீதுகள் (புசுே) மற்றும் இன்வொயிஸ்கள் (ஐஏேழுஐஊநுளு) பிரதான அலுவலகத்திற்கு பெறப்பட்டதன் பின்னர் கணினி அமைப்பிற்கு உட்செலுத்தல் வேண்டும். எனவே, எங்கள் கணினி அமைப்பு செயற்படுத்தப்பட்டு பராமரித்து செல்லும் போது தரவுகளில் காணப்படுகின்ற துல்லியம் மற்றும் இற்றைத் தன்மை பேணிச் செல்லுதலுக்காக கட்டுப்பாட்டின் கீழ் முன்னரான நாளொன்றில் நாளதுவரையாயகும் வகையில் தரவுள் உட்செலுத்துவதற்கு சந்தர்ப்பம் இவ்வாறு வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் விற்பனை அறிக்கைகள், கடன் பட்டோர்.்.  கொடுநர் கால பகுப்பாய்வு அறிக்கை, கடன் பட்டோர்.்.  கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கு அறிக்கை, வவுசர்கள், இருப்பு கட்டுப்பாட்டு அறிக்கைகள் மற்றும் இறுதி கணக்கு அறிக்கைகளும் அமைப்பின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியாது. | கணினி அமைப்பு தொடர்பான தேவைப்பாடு பொது மற்றும் அமைப்பு கட்டுப்பாட்டு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 124,392,743 ஆன இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 97,993,276 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 26,399,467 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு வருமானம் அதிகரித்தல் மற்றும் விநியோக செலவினம் குறைந்தமை பிரதான காரணங்களாகக் காணப்பட்டன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் 2019 செப்தெம்பர் 26 ஆந் திகதி ஓலுமடு களஞ்சியத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது உர பற்றாக்குறையொன்று இனங்காணப்பட்டிருந்ததுடன் உர களஞ்சியத்தின் களஞ்சிய காப்பாளர்கள் கடமையிலிருந்து அகற்றப்பட்டு பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. பரிசோதனையின் பெறுபேற்றின் அடிப்படையில் கம்பனியின் தலைவரினால் 2020 நவம்பர் 24 ஆந் திகதிய கடிதத்தின் ஊடாக மேற்படி களஞ்சிய காப்பாளரினால் ரூபா 2,191,948 ஆன அரச பணத்தொகை மோசடி செய்யப்பட்டுள்ளதெனவும் அரசாங்க பணம் பிழையாக பய்னபடுத்தியமை தெர்பில்புலனாய்வொன்று மேற்கொண்டு மேல் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டு கம்பனியின் தலைவரினால் நிலைய அதிகாரி விசேட புலனாய்வு பிரிவு முல்லைத்தீவு இற்கு கடிதமொன்று வழங்கப்பட்டுள்ளது. எனினும் மேற்படி விடயம் தொடர்பாக பொலிஸில் வழக்கு தாக்கல் செய்யப்படாது நட்டம் அறவிடப்படுவதற்காக சிவில் வழக்கொன்று பணித்தல் காரணத்தினால் அரசாங்க பணம் பிழையாக பயன்படுத்திய குற்றத்தினை மறைப்பதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஓலுமடு பிரதேச உர களஞ்சியத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனை இனங்காணப்பட்ட ரூபா 2,191,948.73 ஆன நிதி மோசடி தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக 2020.11.24 திகதிய வழக்கு முல்லைத்தீவு விசேட குற்றவியல் புலனாய்வு பிரிவின் நிலைய அதிகாரிக்கு எங்கள் கம்பனியினால் முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும் ஓலுமடு பிரதேச உர களஞ்சியம் அமைந்துள்ள அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசம் முல்லைத்தீவு பிரதேசமின்றி வவுனியா விசேட குற்றவியல் புலனாய்வு பிரிவின் அதிகாரத்திற்குட்பட்டதென தெரிவிக்கப்பட்டமையின் காரணத்தினால் மீண்டும் வழக்கொன்று 2022.05.02 திகதி முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அப் பிரிவின் புலனாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே மேற்படி பணம் அறவிடப்படுவதற்கு வவுனியா மாவட்ட நீதிமன்றத்தின் 1338/2021/ஆ ஆம் இலக்க வழக்கு எங்கள் கம்பனியினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | பிழையாக பயன்படுத்தப்பட்டுள்ள பணம் மீண்டும் அறவிடப்படுவதற்கு முறையான மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | உர வழங்குனர்களிடமிருந்து கடனுறுதி கடிதம் தேறும் போது கடனுறுதி கடிதம் வழங்கப்பட்டுள்ள வங்கியினால் கம்பனிக்காக செலுத்தப்பட்ட தொகை கடனிற்கு மாற்றும் போது அத் திகதிக்குரிய மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள அந்நிய செலாவணி வீத்தினை பார்க்கிலும் அதிக வீதமொன்றினை பயன்படுத்தியமையின் காரணத்தினால் மொத்த பெறுமதி ரூபா 485,074,407 ஆன குறுகியகால கடனுக்கு அதிகமாக கொடுப்பனவு செய்வதற்கு கம்பனிக்கு நேர்ந்துள்ளது. | உரம் இறக்குமதி செய்ய வழங்குனர்களின் உறுதிச் சீட்டுகள் தேறும் போது பொது திறைச்சேரியிடமிருந்து அவ் ஒறிச் சீட்டுக்களுக்காக பணம் பெறப்படாமையின் காரணத்தினால் வங்கியினால் கம்பனிக்கபக கொடுப்பனவு செய்யப்பட்டு செலுத்தப்பட்ட தொகை குறுகிய கால கடனாக மாற்றப்படும். அங்கு வங்கியினால் அத் திகதிக்குரிய அந்நிய செலாவணி வீதம் எங்கள் கம்பனிக்கு அனுப்பப்படுகின்றதுடன் அவ் வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு கணக்கு வைத்தல்கள் இடம்றெும். | மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அந்நிய செலாவணி வீதத்திற்கு சீறாக்கப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | லக் பொஹொர கம்பனி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் மொத்த கிரயத்தில் 50 சதவீதம் கம்பனியின் பங்களிப்பில் விற்பனை மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் பெற்றுக் கொடுத்திருந்தது. கம்பனி மற்றும் மோட்டார் சைக்கிள்கள் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள் இடையே ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தரினால் எஞ்சிய 50 சதவீத சமனான 60 தவணைகளில் செலுத்தப்பட வேண்டியதுடன் செலுத்தி முடியும் வரையில் மோட்டார் சைக்கிளின உரித்து கம்பனிக்குரியதாகும். மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் மோட்டார் சைக்கிள்ளொன்றினை பெற்றுக் கொண்ட அப்போது ஓலுமடு களஞ்சியத்தின் காப்பாளர் உர மோசடியொன்று காரணத்தினால் வேலை நிறுத்தத்திற்கு உட்படும் சந்தர்ப்பத்தின் போது மோட்டார் சைக்கிளுக்காக 13 தவணைகள் மட்டும் செலுத்திருந்தார். வேலை நிறுத்தத்திற்கு உட்பட்ட 2019 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் மீளாய்வாண்டு இறுதி வரையில் தவணைக் கட்டணம் அறவிடப்படுவதற்கு அல்லது உடன்படிக்கையின் பிரகாரம் மோட்டார் சைக்கிளை மீண்டும் கம்பனிக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையினால் ரூபா 325,000 ஆன அரசாங்க சொத்து பிழையாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கம்பனியின் பங்களிப்பின் அடிப்படையில் 50% இற்கு சமனான 60 தவணைகளில் கொடுப்பனவு செய்யும் அடிப்படையில் வேலை நிறுத்தத்திற்கு உட்பட்ட ஓலுமடு களஞ்சியத்தின் இருப்பு உத்திோகத்தருக்கு பெற்றுக் கொடுத்த மோட்டார் சைககிள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்காக அவர் தொடர்பான ஒழுக்காற்கு கட்டளை 2022.08.23 ஆந் திகதி கிடைக்கப்பெறும். அதன் பிரகாரம் வரும் கணக்கு ஆண்டில் அம் மோட்டார் சைக்கிளை பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை தவணைக் கட்டணம் அறவிடப்படுவதற்கு அல்லது ஒடன்படிக்கையின் பிரகாரம் மோட்டார் சைக்களினை மீண்டும் கம்பனிக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனிக்கு சொந்தமான நுவரஎலிய மற்றும் பொலன்னறுவை சுற்றுலா விடுதிகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் 2019 மே 10 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் திருத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட கட்டணங்களை உள்ளடக்கிய உள்ளக அலுவலக குறிப்பு பத்திரிக்கையின் பிரகாரம் பண்டிகை நாட்கள் மற்றும் பண்டினை அற்ற நாட்கள் என 2 வகை கட்டணங்கள் மற்றும் கம்பனியின் ஊழியர்கள் மற்றும் வெளி நபர்களுக்காக மாற்றப்பட்ட 2 வகையான கட்டண அறவிடல்கள் அறிமுகப்படுத்திக் | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விலைகளிலிருந்து மாறுப்பட்ட விலைகளின் கீழ் அல்லது இலவசமாக விடுமுறை விடுதிகள் ஒதுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக 2020 செப்தெம்பர் மாதத்தின் போது எங்களினால் இனங்காணப்பட்டது. இனங்காணப்பட்ட பின்னர் விடுமுறை விடுதி காப்பாளர்களுக்கு தேவையான ஆலோசனைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. பண்டிகை | அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் சரியாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுக்கப்பட்டிருந்த போதிலும் பண்டிகை நாட்கள் மற்றும் பண்டிகை அற்ற நாட்கள் உள்ளடங்கும் வகையில் காலம் சரியாக அறிமுகப்படுத்திக் கொடுத்திருக்கவில்லை. உள்ளக அலுவலக குறிப்பு பத்திரத்தின் நாளிலிருந்து திருத்தப்பட்ட கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் தலையீட்டின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி கட்டணம் சரியாக அறவிடப்படாது குறைவான கட்டணம் அறவிடப்பட்டு உள்ளக மற்றும் வெளி தரப்பினருக்கு சுற்றுலா விடுதியினை பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. | காலம் ''ஏப்ரல் மாதம்'' என காலப்பகுதி அறிமுகப்படுத்தல் பணிப்பாளர் சபை பத்திரிக்கையில் மற்றும் வெளியிடப்பட்ட உள்ளக அலுவலக பத்திரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதத்தினை தவிரத்து மற்றைய காலப்பகுதி பண்டிகை அற்ற காலப்பகுதியாக கருதப்பட்டு விலைகள் அறவிடப்பட்டது. | |
| (இ) | கொவிட்ட 19 தொற்று நிலையின் காரணத்தினால் நாடு மூடப்பட்டிருந்தமையினால் சுழற்சி முறையில் கடமையாற்றல் அறிமுகப்படுத்திருந்த போதிலும் அம் முறைமை செயற்படுத்தப்பட்டிராமை மற்றும் மேலதிக நேரத்தினை கட்டுப்படுத்தாமையின் காரணத்தினால் கடந்த ஆண்டிற்கு இணையாக 12.3 சதவீத அதிகரிப்புடன் ரூபா 39,219,757 ஆன தொகை மேலதிக நேரக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | கொவிட் தொற்று நிலையின் காரணத்தினால் நாடு மூடப்பட்டிருந்த போதிலும் சுழற்சி முறையில் கடமையாற்றல் அறிமுகப்படுத்திய போதிலும் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி சிறு மற்றும் பெரும் போகங்களில் உரிய நேரத்தில் உரம் விநியோகிக்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டது. அதன் பிரகாரம் விநியோகித்தல் பிரிவினுள் பகல் இரவு என பார்காது அந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் போது சுழற்சி முறையில் கடமையாற்றப்படவில்லை. எனவே இந்த மேலதிக நேரக் கொடுப்பனவு அதிகரித்தலானது சாதாரணமாக நேர்ந்ததொன்று என குறிப்பிடுகின்றேன். | கொடுப்பனவுகள் செலுத்தும் போது உரிய கட்டுப்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உர போக்குவரத்திற்காக போக்குவரத்து நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் போக்குவரத்திற்காக கையளித்த இருப்புகளுக்கு சேதம் ஏற்பட்டால் குறித்த சேதத்திற்குட்பட்ட இருப்பின் கிரயம் போக்குவரத்து நிறுவனத்தினால் கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டும். எனினும் மானிய ஆமூீ உரத்தினை கொண்ட லொறியொன்று 2020 திசெம்பர் 21 ஆந் திகதி கம்பஹா இம்புல்காட பிரதேசத்தில் அவசர விபத்தொன்றிற்கு முகங்கொடுத்தமையினால் | ஹமீட் போக்குவரத்து சேவைக்கு சொந்தமான லொறியொன்றில் ஹுனுபிடியில் இருந்து பிரதேச களஞ்சியத்திற்கு ஆமூீ உர இருப்பு கொண்டு செல்லும் போது கம்பஹா இம்புல்கொட பிரதேசத்தில் அவசர விபத்தொன்றிற்கு முகங்கொடுத்தமையினால் சேதமடைந்திருந்த மற்றும் மணல் கலந்திருந்த 58 ஆமூீ மூட்டைகள் மீண்டும் மூட்டைகளாக்கி சேதமடைந்திருந்த இருப்பிற்கு பதிலாக | முறையான பரிசோதனை யொன்று மேற்கொண்டு நட்டம் அறவிடப்படுவத-ற்கும் எஞ்சிய இருப்பு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| சேதமடைந்த மற்றும் மணல் கலந்த 58 மூட்டைகள் மீண்டும் உர கம்பனிக்கு கையேற்கப்பட்டு 50 மூட்டைகளாக தயாரிக்கப்பட்டு இருப்பிற்கு கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பான முறையான பரிசோதனைகள் மேற்கொண்டு அக் கம்பனியிலிருந்து பணம் அறவிடப்படுவதற்கும் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள உர இருப்பு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 302,533.65 ஆன தொகை தனியே காசோலை ஊடாக எங்கள் கம்பனிக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன் சேதத்திற்கு உட்பட்ட முழுமையான இருப்பு கம்பனியிற்கு கையேற்கப்பட்டு 07 ஆம் இலக்க களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் போக்குவரத்தாளரினால் அந் நட்டம் அறவிடப்பட்ட பின்னர் அச் சேதத்திற்கு உட்பட்ட உர இருப்பு போக்குவரத்தாளரினால் பெற்றுக் கொடுக்குமாறு கோரப்பட்டதெனிலும் அது கம்பனிக்கு சொந்தமான உர இருப்பு என்பதனால் அவ் உர இருப்பு கம்பனிக்கு கையேற்று குறித்த உர இருப்பிற்காக மேற்படி நட்டம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாதைமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனிக்கு சொந்தமாக இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையில் (ளுசஜ டுயமெய யுஉஉசநனவையவழைெ டீழயசன) பதிவு செய்யப்பட்ட ரூபா 19,264,125 ஆன பெறுமதியான ஆய்வுக் கூட உபகரணங்களை கொண்ட ஆய்வுக் கூடமொன்று காணப்படினும், மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த தெரிவுப் பரிசோதனைகளின் எண்ணிக்கை 103 ஆக காணப்பட்டதுடன் அதற்குரிய வருமானம் ரூபா 1,200,140 ஆகும். இந்த ஆய்வுக் கூடத்தில் வருமானமொன்று ஈட்டுவதற்கு முடிந்த வகையில் மூலோபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இதனால் ஆய்வுக் கூடத்திற்கு சொந்தமான வளங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | பசுமை கைத்தொழிலுக்காக அரசாங்க கொள்கைகள் செயற்படுத்தும் போது தற்போது எங்கள் ஆய்வுக் கூடத்திற்கு பாரிய பொறுப்பொன்று பணிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிறுவனம் கொள்வனவு செய்கின்ற உர மாதிரிகள் பரிசோதனைகள் 836 மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் பெறுமதி கணக்குகளுக்கு சீராக்கப்பட்ட முடியாது. அதனால் எண்ணிக்கையாக கணக்கிடப்படாத பெறுமதி ரூபா 1,919,900 ஆகும். வெளி நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளிலிருந்து மட்டும் பெறப்படுகின்ற வருமானம் கணக்கிடப்பட்டுள்ளது. அதன் எண்ணியல் பெறுமதி ரூபா 693,406 ஆகும். ஆய்வுக் கூடத்தினுள் மூன்று ஓழியர்கள் மட்டும் கடமையாற்றுவதுடன் அவ் உத்தியோகத்தர்களிடமிருந்து உயர்நத வினைத்திறனான மற்றும் விளைத்திறனான சேவை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த பகுப்பாய்வுகளுக்காக ஆய்வுக் கூட ஊபகரணங்கள் உயர்ந்த பட்சமாக பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அதில் சில உபகரணங்கள் பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு நேர்ந்துள்ளது. | கம்பனிக்கு சொந்தமான சொத்துக்களில் இருந்து உயரிய வருமானம் ஈட்டக்கூடிய வகையில் மூலோபாய திட்டமொன்று தயாரித்து செயற்படுத்தப்படல் வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மானிய உரம் பெற்றுக் கொடுக்கும் முறை செயற்படுத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டு தொடக்கம் நெல் பயிற்சிக்காக உரம் வழங்கும் அரச முகவராக லக் பொஹொர கம்பனி நடவடிக்கை எடுக்கின்றதுடன் அத்திகதியிலிருந்து விற்பனை மேம்பாடு மற்றும் விற்பனை தொடர்பான வேறு பணிகள் பாரியளவில் குறைந்துள்ளது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை திருத்தப்படுவதற்கு பதிலாக கம்பனி அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் பதவியணிக்கு சொந்தமான, மாவட்ட சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பாளர்கள், பிரதேச சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பாளர்கள், சந்தைப்படுத்தல் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் போன்ற பதவிகளில் தொடர்ச்சியாக வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டில் பிரதேச சந்தைப்படுத்தல் முகாமையாளர்கள் பதவிகள் 5 இற்காக பதிற்கடமை அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இக் காரணத்தினால் கம்பனிக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவிற்காக சிக்கனமற்ற கிரயமொன்று ஏற்பதற்கு நேர்ந்துள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2011.08.25 திகதியில் எங்கள் கம்பனிக்கு அங்கீகரித் பதவியணியில் மத்திய மட்டத்தின் முகாமைத்துவ சேவைகள் பிரிவின் பிரதேச விற்பனை முகாமையாளர் பதவிகள் 09 உள்ளடக்கப்பட்டுள்ளது. விவசாயம் முழுமையாக கரிம உர பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் அப்போதிருந்த அரசாங்க கொள்கையின் பிரகாரம், கரிம உர வழங்குனர்களை பதிவு செய்தல் மற்றும் கரிம உரம் கொள்வனவு செய்யும்.ஃ. விநியோகிக்கும் நடவடிக்கைகள் தொடர்புப்படுத்தல் போன்று எங்கள் களஞ்சிய வலையமைப்பினை இயக்குதல் மற்றும் செயற்படுத்தல் பிரதேச விற்பனையாளர்களுக்கு பணிக்கப்பட்டிருந்தமையினால், வெற்றிடங்கள் நிலவிய பிரதேச விற்பனை முகாமையாளர்கள் பதவிகள் 05 இற்காக பதிற் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தது. | பணிகள் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் ஊழியர் எண்ணிக்கை திருத்தப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 திகதிய ீநுனு.ஃ.12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம், கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் அனைத்து அரச கம்பனிகளும் நிதிக் கூற்றுக்களை தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2020/2021 நிதி ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் கணக்கு ஆண்டு முடிவடைந்து 229 நாட்களுக்குபின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நாட்டினுள் நிலவிய மோசமான சுகாதார நிலை மற்றும் கடமைக்கு ஊழியர்களை அழைத்தல் மட்டுப்படுத்தப்படல் காரணத்தினால் உரிய திகதியில் இறுதி கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்க முடியாது போனது. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |